செய்தி வெளியீடு எண்: 114 நாள்: 12.02.2019

# செய்தி வெளியீடு

தமிழக அரசின் சார்பில் சென்னை தீவுத்திடலில் தற்போது நடைபெற்று வரும் அகில இந்திய சுற்றுலா மற்றும் வர்த்தக பொருட்காட்சியில் சமூகநலம் (ம) சத்துணவுத் திட்டத் துறை சார்பாக அரங்கு அமைக்கப்பட்டுள்ளது. அவ்வரங்கில் சமூகநலத் துறை சாார்பாக செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் தொடர்பான காட்சிகளும் இடம் பெற்றுள்ளன. இவற்றை நூற்றுக்கணக்கான பார்வையாளர்கள் பார்வையிட்டு செல்கின்றனர். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தவும், சமூகநலத் திட்ட உதவிகளை பொதுமக்கள் அறிந்து கொள்ளும் நோக்கத்துடனும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் தொடர்பான வினாக்கள் தயார் செய்து பார்வையிட வந்த பார்வையாளர்களிடம் வழங்கப்பட்டு அவற்றுக்கான பதில்கள் பெறப்பட்டுள்ளது. அவ்வாறு சரியான பதிலளித்த மூன்று நபர்கள் குலுக்கல் முறையில் தேர்வு செய்து அவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் சமூகநலத் துறையால் செயல்படுத்தப்படும் சமூகநலத் திட்டங்கள் தொடர்பான வினாக்கள் தயார் செய்து அரங்கிற்கு வருகைபுரியும் பார்வையாளர்களிடம் வழங்கப்பட்டு சரியான பதிலளிக்கும் மூன்று நபர்களுக்கு குலுக்கல் முறையில் பரிசளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. எனவே இப்போட்டியில் பார்வையாளர்கள் பெருவாரியாக கலந்து கொண்டு பரிசுகளை வென்றிடவும் சமூகநலத் துறை சார்பான திட்டங்கள் தொடர்பாக பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திடுமாறும் அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

முதல் போட்டியில் கலந்து கொண்டு பரிசுகள் பெற்றவர்களின் விவரம் பின்வருமாறு.

**1.திரு.தியாகராஜன் (அரியலூர் மாவட்டம்), 2.திரு.எஸ்.பி.ஜீவன் (வியாசர்பாடி, சென்னை) மற்றும் 3.திரு.கார்த்திகேயன் (அம்பத்தூர், சென்னை).**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**